**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108508

1. District : மாவட்டம் Coimbatore | PS: காவல்நிலையம் VSAC Coimbatore | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 15/2021/AC/CS | Date: நாள் 15/07/2021 1000 hrs

2. (i) Act சட்டம்: The Prevention of corruption | Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by | Sections பிரிவுகள்: –
   (iii) Act சட்டம்: Prevention of corruption (Amendment) act 2018 | Sections பிரிவுகள்: –
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் Last week i.e. 07/07/2021 | Date to : நாள் வரை 14.07.2021 at 1730 hrs
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் – | Time to : நேரம் வரை –
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.07.2021 | Time : நேரம் 0800 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15.07.2021 | Time : நேரம் 0800 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 10 Km North west
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Office of Assistant Engineer, TANGEDCO, Chinnathadagam, Coimbatore North.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. N. JAYANTHI | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Nataraj
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35 yrs | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் – | (g) Address : முகவரி 16/79. Alamara medu Anaikatty post, Coimbatore District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Sureshbabu, Assistant Engineer, TANGEDCO Chinnathadagam, Coimbatore North.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. Jayanthi 15/07/2021

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 15.7.2021

15. Date & Time of despatch to the court: 15.07.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. VETRIVELKANNAN
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் ..........
V&AC, Coimbatore

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

சமர்ப்பிக்கப்படுகிறது:

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2021/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

15.07.2021-ம் தேதி வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு காவல் ஆய்வாளர் M.விஜயலட்சுமி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர், ஆனைகட்டி, ஆலமரமேடு, கதவு எண்-16/79, என்ற முகவரியில் குடியிருந்து வரும் நடராஜ் என்பவரது மகள் N.ஜெயந்தி, வயது-35, என்பவர் கோவை ஊ.த.க. அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோவை சின்னதடாகம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் உதவி மின் பொறியாளராக பணிபுரியும் திரு.சுரேஷ்பாபு என்பவர் புகார்தாரருக்கு சொந்தமாக 24-வீரபாண்டி கிராமத்தில் அமைந்துள்ள மனையிடத்தின் மேல் செல்லும் மின் கம்பிகள் மற்றும் அவர் மனையிடத்தின் அருகில் அமைந்துள்ள மின் கம்பத்தை மாற்றியமைக்க அதற்கான எஸ்டிமேஷன் போட்டு அனைத்து வேலைகளையும் முடித்து கொடுக்க லஞ்சமாக பணம் கேட்டது தெரியவந்தது. புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 15.07.2021-ம் தேதி காலை 10.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2021/AC/CB, u/s. 7(a) of

the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரி திரு.சுரேஷ்பாபு, மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் N. ஜெயந்தி வயது 35 த/பெ நடராஜ், 16/79 ஆலமரமேடு, ஆனைகட்டி (Post), கோவை -641 108 பெறுநர்: ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, கோவை. அய்யா, நான் ஆனைகட்டி, ஆலமரமேட்டில் எனது குழந்தைகள் மற்றும் அப்பா அம்மா அவர்களுடன் வசித்து வருகிறேன். எனக்கு கோவை 24-வீரபாண்டி கிராமத்தில் அரசாங்கத்திடமிருந்து சுமார் 1½ செண்டில் மனை எண்.61-க்கு இலவசமாக வீட்டுமனைபட்டா 2015ஆம் ஆண்டு என் பெயரில் வழங்கப்பட்டது அப்போது அந்த இடத்தில் எந்தவிதமான மின் இணைப்பும் இல்லை. நான் தற்சமயம் அந்த இடத்தில் வீடுகட்ட வேண்டி சென்று பார்த்த போது. எனது இடத்தின் பின்புறம் உள்ள சைட்டில் வீடுகட்டப்பட்டுள்ளது. எனது மனை அருகில் ஒட்டியுள்ள பொது இடத்தில் கம்பம் நட்டு எனது மனையின் மேல் மின் கம்பிகள் பின்புறம் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கு செல்கிறது. எனவே எனது மனையின் மேல் மின் கம்பிகள் செல்வதால் நான் வீடுகட்டுவதற்கு மின் கம்பிகள் இடையூறாக உள்ளது அந்த மின் கம்பம் மற்றும் கம்பிகளை இடம் மாற்றி அமைத்து தரும்படி சின்ன தடாகம் உதவி மின்பொறியாளர் அவர்களை ஏப்ரல் மாதம் 2021ல் கடைசி வாரத்தில் அவரது அலுவலகத்திற்கு சென்று பார்த்தேன். அப்போது அவர் என்னை விசாரித்து விட்டு என்னிடம் விண்ணப்பம் மற்றும் ரூ.100/- பாண்ட் பேப்பரில் உறுதிமொழிபத்திரம் ஒரு மாடல் கொடுத்து, அதேபோல் ரெடி செய்து அதனுடன் வீட்டு மனைபட்டா இணைத்து கொடுக்குமாறு சொன்னார். மேலும் அவர் உங்களுக்கு மின் கம்பம் இடம்மாற்றி வைக்கனும் அதற்கு ரூ.80,000/- செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் என்ன சார் இவ்வளவு ஆகுமா என்று நான் கேட்டேன். அதற்கு அவர் முன்ன பின்ன ஆகும் பேசிக்கலாம் வாங்க என்று சொன்னார். உதவி மின்பொறியாளர் அவர்களின் பெயர் சுரேஷ்பாபு என்று பின்னர் நான் தெரிந்துகொண்டேன். நான் அவர் சொன்னதுபோல விண்ணப்பத்தினை எழுதி அதனுடன் அவர் சொன்ன பாண்ட் பத்திரம் மற்றும் எனது வீட்டுமனை பட்டா ஆகியவற்றை இணைத்து 03.05.2021 ஆம் தேதி சின்ன தடாகம் மின்வாரியம்

அலுவலகம் சென்று உதவி மின்பொறியாளர் சுரேஷ்பாபு அவர்களை சுமார் 12.30மணியளவில் பார்தது எனது விண்ணப்பததை கொடுத்தேன். அவர் நான் கொடுத்த விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை பார்த்துவிட்டு ரூ.200/- கொடுங்கள் நான் விண்ணப்பத்தை பதிவுசெய்து கொள்கிறேன் என்று சொன்னார். நானும் அவரிடம் ரூ.200/- கொடுத்தேன். அதற்கான ரசீது எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை. பின்னர் அவர் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.80,000/- கொண்டுவந்தீர்களா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் சார் அவ்வளவு பணம் கொடுக்க எனக்கு வசதியில்லை கொஞ்சம் கம்மி பண்ணுங்க என்று கேட்டேன். அதற்கு அவர் பணத்தை ரெடிபண்ணி கொண்டுவாங்க என்று சொல்லி என்னுடைய செல்போன் நம்பரை வாங்கி கொண்டார். பின்னர் சுமார் ஒரு வாரம் கழித்து அவர் என்னை 9445851083 என்ற நம்பரிலிருந்து எனது செல்போன் நம்பர் 9442500006-க்கு அழைத்தார். நான் போன் எடுப்பதற்குள் லைன் கட்டாகிவிட்டது. பின்னர் நான் அவரை அழைத்தபோது அவர் என்னை அலுவலகத்திற்கு வாங்க என்று சொன்னார். அவர் சொன்ன மறுநாள் நான் சின்னதடாகம் மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று உதவி மின்பொறியாளர் திரு.சுரேஷ்பாபு அவர்களை காலை சுமார் 11.00 மணிக்கு அவருடைய அலுவலகத்தில் சந்தித்தேன் அப்போது அவர் பணம் கொண்டு வந்தீர்களா என்று கேட்டார் அதற்கு நான் என்னால் ரூ.80,000/- கொடுக்க முடியாது சார் என்று சொன்னதற்கு அவர் சரி ரூ.55,000/- கொடுங்கள் என்று சொல்லி டி.டி. எடுக்க வேண்டிய தொகை, estimation தொகை மற்றும் லஞ்சமாக கொடுக்க வேண்டிய தொகையையும் சேர்த்தி மொத்தம் ரூ.55,000/-ஐ கொடுக்க சொன்னார். இந்த தொகையை கொடுத்தால்தான் மின்கம்பம் மற்றும் மின்கம்பி மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னார். நான் அவரிடம் என்ன சார் இவ்வளவு சொல்றீங்க இன்னும் கொஞ்சம் கம்மி பண்ணுங்க என்று கேட்டேன். அதற்கு அவர் இதற்குமேல கம்மிபண்ண முடியாது என்று சொன்னார் நானும் சரியென்று வந்துவிட்டேன். என்னால் பணம் ஏற்பாடு செய்யமுடியாததால் நான் மின்வாரிய அலுவலகம் செல்லவில்லை. பின்னர் சுமார் ஒருமாதம் கழித்து 13.07.2021ஆம் தேதி என்னை அவருடைய செல் நம்பர் 9445851083 என்ற நம்பரிலிருந்து என்னை அழைத்தார் நான் அட்டன் செய்வதற்குள் கட்டானதால் நான் அவரை மேற்படி

நம்பருக்கு காலை சுமார் 10.15மணிக்கு அழைத்தேன் அப்போது அவர் ஏன் என்னை கூப்பிடவில்லை என்று கேட்டார். அதற்கு நான் நீங்களே என்னை கூப்பிடுவதாக சொன்னீங்க அதனால்தான் நான் கூப்பிடவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் ஒருமாதமாக கொரானா லீவில் இருந்தேன் என்று சொன்னார். பணம் ரெடி பண்ணீட்டீங்கள என்று கேட்டார். சார் ரெடிபண்ணல என்று சொன்னேன். அதற்கு அவர் உங்கள் Application Reject ஆயிடுச்சு என்று சொன்னார் நான் ஏன் என்று கேட்டதற்கு ஒரு மாதம் ஆனதால் reject ஆயிடுச்சு ஒன்னும் பிரச்சனை இல்லை திரும்ப நீங்க கொடுத்த விண்ணபத்திலேயே தேதி மாற்றி பதிவுசெய்ய ஏற்பாடு செய்துவிடுகிறேன். நீங்கள் ரூ.55,000/- ரெடிபண்ணிட்டு வாங்க என்று சொன்னார். நான் 14.07.2021 மாலை சுமார் 05.30 மணிக்கு எனது குடும்ப நண்பர் திரு.சோமசுந்தரம் அவர்களுடன் மின் பொறியாளர் திரு.சுரேஷ்பாபு அவர்களை அவருடைய அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது அவரிடம் எனது மனையிடத்தில் உள்ள மின்கம்பத்தை மாற்றி தரும்படி கேட்டப்போது டி.டி. எடுப்பதற்கும் estimation போடுவதற்கும், இதரசெலவுகளுக்கும் சேர்த்து ரூ.40,000/-ம் வரை வரும் என்றும் அத்துடன் எனக்கு லஞ்சப்பணம் ரூ.15,000/- சேர்த்து மொத்தம் ரூ.55,000/- கொடுங்கள் என்று சொன்னார். சார் நான் டி.டி யார் பெயரில் எடுக்கவேண்டும் என்று கேட்டேன் அதற்கு அவர் நீங்க சிரமப்படவேண்டாம், மொத்த பணம் ரூ.55,000/- என்னிடம் கொடுங்கள் நானே டி.டி. எடுத்துக்கொள்கிறேன் மற்றும் எஸ்டிமேசன் ஜார்ஜ் நானே கட்டிகொள்கிறேன் என்று சொன்னார். நான் எப்பவரனும் என்று கேட்டதற்கு அதற்கு அவர் நாளை(15.07.2021) சின்னதடாகம் வந்து என்னை போனில் கூப்பிடுங்க, அலுவலகத்தில் யாரும் இல்லையென்றால் உங்களை அலுவலகம் வரசொல்கிறேன். அலுவலகத்தில் யாராவது இருந்தால் வெளியே வந்து பணத்தை என்னிடமிருந்து வாங்கிகொள்கிறேன் என்று சொன்னார். உதவி மின்பொறியாளர் திரு.சுரேஷ்பாபு அவர்கள் என்னை டி.டி. எடுக்கவேண்டாம் என்றும் மொத்த தொகையையும் அவரிடமே கொடுக்க சொல்கிறார். பணத்தை கொடுத்தால் தான் estimation தயார் செய்து மின் கம்பம் மற்றும் மின்கம்பிகள் மாற்றி அமைப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகள் எடுக்கமுடியும் என்று சொன்னார். பின்பு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் யோசித்து பார்த்ததில் எனது

மனையிடத்தின் மேல் செல்லும் மின் கம்பி மற்றும் அருகில் உள்ள மின் கம்பத்தை மாற்றி அமைக்க estimation போட்டு அனைத்து வேலைகளையும் முடித்து தருவதற்கு அரசுக்கு கட்டவேண்டிய தொகை என்று உதவி மின்பொறியாளர் என்னிடம் கேட்ட ரூ.40,000/-யுடன் லஞ்சமாக பணம் ரூ.15,000/- உதவி மின்பொறியாளர் திரு.சுரேஷ்பாபு அவர்களுக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லை எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd.XXXXX 15/07/2021. Sir, Received the complaint on 15.07.2021 at about 0800hrs. sd.XXXXX, Inspr, V&AC, Cbe 15.07.2021. Sir, After conducting discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.15/2021/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 15.07.2021 at about 10.00 hrs. sd.XXXXX Inspr, V&AC, Cbe 15.07.2021. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கு மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

(M.விஜயலட்சுமி),<br>
காவல் ஆய்வாளர்,<br>
ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்புபிரிவு,<br>
கோயம்பத்தூர்.